Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර්

ஒளி - 02 - கதிர் - 43 01.06.2001 வெள்ளிக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

நகையா 22 கரட்டில் தெரிவு செய்ய இன்றே நாடுங்கள்

A.K.S ஜீவலர்ஸ்

பிரதான வீதி

களுவாஞ்சிகுடி

## சமாதான முயற்சிக்கு புலிகளின் தடை நீக்க வேண்டும்!

# ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி ஆலோசனை

பேச்சு மூலம் சமாதானத் தீர்வைக் காணும் முயற்சியைத் தொடருமாறு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோரியிருக்கின்றது.தேவையான விட்டுக்கொடுப்பு களைச் செய்து அவசியமானால் விடுதலைப் புலிகள் மீதான தடையை இடைநிறுத்தி, பேச்சு முயற்சியை வெற்றிகரமாக மேற்கொள்ளும்படியும் அக்கட்சியின் மத்திய குழு சிபாரிசு செய்திருக்கின்றது.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று முந்தினம் மாலை 6 மணி முதல் நள்ளிரவு வரை - சுமார் ஐந்து மணி நேரம் - ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் நடைபெற்றது. இருபதுக்கும் - முப்பதுக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையுடைய உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியதாகத் தெரிகின்றது. "சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்குத் தேவையான விட்டுக் கொடுப்புகளைச் செய்யவேண்டும். அவசியமானால் புலிகள் மீதான தடையை இடைநிறுத்த வேண்டும்.

(8ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் காணாமல் போனோர் அதிகரிப்பு,மன்னிப்புச் சபை கவலை!

(லண்டன்)

**இலங்கையில் காணாமல் போனோர் பற்றியும் வவுனியாப் பகுதியிலேயே கடந்த ஆண்டில் அதிகமானோர் காணாமல் போயிருப்பதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் கவலை தெரிவித்திருக்கிறது. கடந்த ஏப்ரல் 23ஆந் திகதி இராணுவத்தினரிடம் அனுமதி அட்டை பெறச் சென்ற ஒருவர் இராணுவத்தினர் விசாரணை செய்த பின் காணாமல் போனது பற்றியும் மன்னிப்புச் சபை குறிப்பிட்டு கவலை தெரிவித்திருக்கிறது.**

கடந்த ஏப்ரல் 23ம் திகதி இராணுவத்தினரிடம் நிரந்தர வதிவிட அனுமதி அட்டை பெறச் சென்ற போது இராணுவத்தினரால் விசாரணை செய்யப்பட்ட பின் காணாமல் போன முருகேசு ஆனந்தராசா என்பவர் தொடர்பான பாதுகாப்பு குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கவலையும் அக்கறையும் தெரிவித்து நேற்று அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது வவுனியா மாரம்பை குளத்தை சேர்ந்த முருகேசு ஆனந்தராசா (30) இராணுவத்தினரின் கட்டுப் பாட்டிலுள்ள வவுனியா பிரதேசத்தில் நடைமுறையில் உள்ள இராணுவ பாஸ் நடைமுறையின் படி நிரந்தர அனுமதி அட்டை பெற வவுனியா நகரிலுள்ள சி.சி.மீ.பாடசாலைக்கு சென்றுள்ளார்.

தனது வீட்டில் இருந்து துவிச்சக்கர வண்டியில் சென்ற இவரை வதிவிட பாஸ் வழங்கப்படும் பாடசாலைக்கு அருகில் முகாம் இட்டிருந்த இராணுவத்தினர் விசாரணை செய்ததை இவரது நண்பர் ஒருவர் கண்டிருக்கிறார். அதன் பின்னர் முருகேசு ஆனந்தராசா காணாமல் போயுள்ளார்.

அவரை விசாரணை செய்த இராணுவத்தினரால் அவர் கைது செய்யப்பட்டதற்கு அடையாளமாக பாடசாலைக்கு வெளியில் இவர் கொண்டு சென்ற துவிச்சக்கர வண்டி கண்டெடுக்கப்பட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை தமது அறிக்கையில் விபரம் தெரிவித்திருக்கிறது.

காணாமல் போனோர் தொடர்பாக அவரது உறவினர்கள் மேற் கொண்ட முயற்சிகள் இது வரை பயனளிக்கவில்லை எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை 2000 ஆம் ஆண்டு இலங்கையில் மனித உரிமை நிலமை குறித்து ஆண்டறிக்கையில் இந்த ஆண்டில் குறைந்தது 20 பேர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 11 பேர் வவுனியாவில் வைத்து காணாமல் போயுள்ளனர்.இதற்கு முந்திய ஆண்டுகளிலும் வவுனியாவிலேயே அதிகமானோர் காணாமல் போயுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் 10ம் திகதிக்கும் 26ம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வவுனியாவில் காணாமல் போனோர் 10 பேர் தொடர்பாக ஜனாதிபதியின் நேரடி உத்தரவின் பேரில் நடத்த

(8ம் பக்கம் பார்க்க)

## தாதியர் அசமந்தம்;

### *சிசுவைக் காப்பாற்றிய தாய்*

(பழுகாமம் நிருபர்)

பிரசவத்திற்காக பட்டிருப்பு வைத்தியசாலையில் ஒரு பெண் அனுமதிக்கபட்டிருக்கிறார்.அவர் பிரசவ வேதனையில் அவதியுற்றதைக் கண்ட அப் பெண்ணின் தாயார் அவ்வேளையில் கடமையில் இருந்த தாதியரிடம் ஓடிச் சென்று முறையிட்டுள்ளார்.அதனைக் கேட்ட தாதியர்கள் வருகிறோம் என்று கூறிவிட்டு குளிர்சாதனப் பெட்டி கொள்ளவனவு செய்வது பற்றி உரையாடிக் கொண்டிருந்தார்களாம் இதனால் ஆத்திரம் கொண்ட தாய், தாதியர்மாரைத் திட்டித் தீர்த்திருக்கிறார்.

இதன் பின்னர் தான் தாதியர்கள் தள்ளு வண்டியில் அப் பெண்னை ஏற்றியிருக்கி

(8ம் பக்கம் பார்க்க)

## வவுணதீவு ஊடான போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளது!

(தவம்)

வவுணதீவு பாலத்தினூடான போக்குவரத்து நேற்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளது.நேற்று முந்தினம் இராணுவக் கட்டுப்பாடில்லாத கரவெட்டி பகுதியை நோக்கி மட்டுபடுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றில் படையினர் ஈடுபட்டதால் இப் பாதையினூடாக போக்குவரத்து சீரின்றி இருந்தது.

இதேவேளை இந்த இராணுவ நடவடிக்கையின் போது நடை

(8ம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை நீக்கப் பட வேண்டும்!

### செந்தில்நாதன்

(நமது நிருபர்)

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு துணிவுடனும் தூர நோக்குடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.என்று புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி.க.செந்தில் நாதன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டுமென்றால் அரசு விடுதலைப் புலிகள் மீதான தடையினை நீக்கி அவர்கள் பேச்சுக்கு வருவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

## காற்றில் பறந்த சோதனை சாவடி


(அரியம்)

மட்டு நகரில் கச்சான் காற்று காரணமாக சின்னப் பாலத்தடியில் இருந்த சோதனைச் சாவடிக் கூரை விழுந்து சேதமாகியது.

நேற்று முந் தினம் பகல் வீசிய கச்சான் காற்றின் போதே சோதனைச் சாவடியின் மேல் கூரையில் போடப்பட்டிருந்த தகரங்கள் கம்பு,தடிகள் காற்றில் பறந்து கிழே விழுந்தன.மட்டக்களப்பில் கடந்த மூன்று தினங்களாக கச்சான் காற்று வீசுவதால் மண் முனை, அம்பிளாந்துறை வாவிகளின் படகுச் சேவைகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.


படுவான்கரைப் பகுதியில் இராணுவ நகர்வில் ஒரு அப்பாவி பலி

செய்தி



ஒரு அப்பாவியைச் சுடுறத்துக்காகத் தான் ஊர்ப்பட்ட ஆமிகள் ஊரெல்லாம் செல்லடித்து போணவங்களாக்கும்.........................

கல்முனையிலே 50 வருடங்களுக்கு மேலாக.....
கட்டிடப் பொருள்கள், இயந்திரப்பொருள்கள், மற்றும்
கைத்தொழிலுக்கான ஆயுதங்கள் போன்ற சகல
பொருள்களையும் தரமானதாகவும், நியாயமான விலையிலும்
வழங்கிவந்த
கொழும்பு ஜேவரி ஸ்டோர்ஸ்
ஸ்தாபனத்தாரின் புதிய அறிமுகம்
C.D.S.BABY CARE



குழந்தைகளுக்கான பராமரிப்புப் பொருள்கள்
மற்றும்அன்பளிப்புப் பொருள்களையும்
தரச்சிறப்புமிக்வையாக நியாயமான விலையில்
பெற நாடுங்கள்



"C.D.S.BABY CARE"
Colombo Drapery Stores
இல:- 24, பிரதான வீதி,
கல்முனை.
தொ.பேசி:- 065-29154 தொலை மடல்:- 21426

உடனடி வேலைவாய்ப்பு
1. முஸ்லிம், முஸ்லிம் அல்லாத வீட்டுப் பணிப்பெண்களுக்கு முற்றிலும் இலவசமாக சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்படும், வயதெல்லை 25 தொடக்கம் 40 வரை (குவைத், பஹ்ரைன், ஜோர்தான், டோகா கட்டார் போன்ற நாடுகளுக்கும் அனுப்பப்படும்)
1. டோகா கட்டார் இலும் உடனடி வேலைவாய்ப்பு (ஆண்களுக்கு)
* ALUMINIUM FABRICATORS,
* ALUMINIUM INSTALLER,
* ALUMINIUM FABRICATORS,
* ALUMINIUM FITTER.
* TILE PIXER,
* MASON,
* CARPENTER,
* PAINTER,
* ELECTRICIAN,
* ELECTRONIC TECHNICIAN
போன்ற வேலைவாய்ப்புகளும் உண்டு சான்றிதழ்களுடன் நேரடியாக வரவும்.
உடனடிப் பயணம்
நியூபாஹிம் என்டப்பிரைஸஸ்
LL No -736
283/1 பிரதான வீதி, கொழும்பு.
விசாரணைகளுக்கு:
இல:15/1, 15/2, பிரதான வீதி,
காத்தான்குடி -02
065-47090
ADVT.

# தினக்கதிர்

த.பெ. இல: 06
155, திருமலை வீதி ,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
E-mail :- tkathir@snet.lk


## இனப்பிரச்சினைத்தீர்வுக்காக புதிய அரசியலமைப்பு

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேச்சு நடத்துவதற்கு சாதகமான சூழ்நிலை இன்று இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஒரு பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

சமாதானமான அரசியல் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் போரை நிறுத்தி விட்டு பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு வர வேண்டியதான அவசியத்தை ரூபவாஹினிக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா வலியுறுத்தியிருக்கிறார்.

நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு சந்திரிகா ஆர்வத்துடனிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தாலும் எந்த முடிவையும் மேற்கொள்ள முடியாத நிலையிலிருப்பது அவர் மீது அனுதாபத்தையே ஏற்படுத்துவதாக உள்ளது.

1956, 57 - 58 ஆம் ஆண்டுகளில் சந்திரிகாவின் தந்தை எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயகா இருந்த தர்ம சங்கடமான நிலையிலேயே இன்று சந்திரிகா இருக்கிறார்.

பேரினவாதிகள் கொடுக்கும் நெருக்கடி ஒரு புறம், ஆளும் கட்சிக்குள்ளேயே இருக்கும் அரசியல் வாதிகளின் குறுகிய நோக்கங்கள் மறுபுறம்.

போரை நிறுத்தி விட்டுப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகள் வரவேண்டுமென்று சந்திரிகா கூறுகிறார்.

நான்கு மாத காலமாகப் போரை நிறுத்தி விட்டுப் பேச்சுவார்த்தைக்கு ஏற்ற சூழ் நிலையை உருவாக்கிச் சாதித்துப் பேசுவோம் அரசுப் போர் நிறுத்தம் செய்து வரட்டும் என்று விடுதலைப்புலிகள் கோரிய போது போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறியது ஆட்சியிலுள்ளவர்கள் தான்.

சமாதானத்துக்கான போர் என்று ஜனாதிபதி சந்திரிகா சொல்லிப் போரைத் தொடர்ந்த போது போருக்கும் போர் மூலமே முடிவு காணப்பட வேண்டுமென்று அதைத் தொடர்ந்தவர் பிரதமர் இரத்தினசிறி விக்கிரம நாயகா.

நான்கு மாதப் போர் நிறுத்தத்தை மேலும் நீடிப்பதில்லையென்று விடுதலைப்புலிகள் தீர்மானித்த சில மணி நேரங்களுக்குள்ளேயே புலிகள் மீது தாக்குதல் நடத்தி போரை முன்னெடுத்துச் சென்று எழுதுமட்டுவாளில் போரைத் தொடங்கியது அரச படைகள் தான்.

இந்நிலையில் போரை நிறுத்திவிட்டுப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகள் வர வேண்டுமென்று ஜனாதிபதி கேட்பது என்ன நியாயம்.

சமாதானப் பேச்சுவார்த்தை பற்றிப் பேசும் போதே புதிய அரசியல் யாப்பை நிறைவேற்றுவது பற்றியும் அமைச்சர்கள் சிலர் பேசுகின்றனர்.

புதிய அரசியல் யாப்பை நிறைவேற்றுவதால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமென்கிறார்கள். அப்படியானால் நோர்வேயின் முயற்சி எதற்கு?; பேச்சுவார்த்தை எதற்கு?

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஆளும் கட்சிக்கு இருந்து வந்த சிறிதளவு நட்புறவும் கூட இன்றிருப்பதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்லாமல் இன்று இரு கட்சிகளுக்கிடையிலும் முறுகல் நிலையே ஏற்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் நெருங்கிய உறவிருப்பதாக ஒரு புறம் பிரசாரம் செய்து கொண்டு இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்பதன் அர்த்தம் என்ன?

சமாதானப் பேச்சுவார்த்தை இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விட ஆட்சி பீடத்தில் எப்படித் தொடர்ந்து இருப்பது என்பது மாற்றித் தான் முக்கிய பிரச்சினையாக ஆட்சிப்பீடத்திலுள்ளவர்கள் சிந்திப்பதாகத் தோன்றுகின்றது.

இன்று இலங்கையின் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் சந்திரிகா ஏற்கனவே ஜனாதிபதி பதவிக்காலத்தை நிறைவுசெய்திருக்கிறார்.

இந்த ஆறு ஆண்டுக்காலப்பதவியையும் நிறைவுசெய்தால் மீண்டும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட முடியாது.

எனவே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியை முடிவுக்குக் கொண்டு வந்து பாராளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்கும் அரசியல் அமைப்பை நிறைவேற்றினால் அத்தேர்தலில் போட்டியிட்டு சந்திரிகா அதிகாரமுள்ள பிரதம மந்திரியாகத் தொடர்ந்து ஆட்சியிலிருக்கலாம்.

இது தான் இன்றைய முக்கிய பிரச்சினையாகக் கருதப்படுகிறதே தவிர இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வல்ல. இதற்காகவே தான் புதிய அரசியலமைப்பை நிறைவேற்ற வேண்டுமென்று ஆளும் கட்சியினர் கவலைப்படுகின்றனர்.

# புகைத்தல் மனித இனத்திற்கு பொருந்துமா?

**— டாக்டர் எம்.கந்தசாமி —**

இன்று நாட்டில் புகை பிடிக்கும் வழக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. முன்பெல்லாம் வயதில் முதிர்ச்சியடைந்தவர்களே புகைக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று வயது குறைந்தவர்களும் மாணவ சமுதாயமும் இப்புகைத்தல் பழக்கத்திற்கு அடிமையாகி இருப்பதை நாம் இன்று அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இன்று நாம் சிற்றுண்டிச்சாலைகளுக்குச் சென்றால் பல மாணவர்கள் சிகரட்டும் கையுமாக இருப்பதை அவதானிக்கலாம். சிகரட் குடிப்பவர்களின் தொகை இன்று 95 வீதமாக இருப்பதாக ஆய்வாளர்கள் கண்டு பிடித்திருக்கின்றார்கள். புகைத்தல் கேடு விளைவிக்கக் கூடியது. புற்று நோயைத்தரக்கூடியது என சிகரட் பெட்டிகளில் சுகாதார அறிவித்தல் காணப்பட்டாலும் புகைபிடிப்பவர்கள் புகை பிடிக்கும் பழக்கத்தை விட்டபாடில்லை. இந்தப் பழக்கத்திற்கு தங்களை அடிமைப்படுத்தி தொடர்ச்சியான புகைப்பிடிப்பை தொடர்வதில் இன்பம் காணும் புகை பிடிப்பாளர்களை நாம் என்னவென்று சொல்வது.

புகை பிடிப்பதனால் ஏற்படக்கூடிய பாரிய விளைவுகளை புகைபிடிப்பாளர்கள் புரிந்து கொள்ளவில்லை என்றால் புகைத்தலை நிறுத்த முடியாது. சிலர் தாம் நீண்ட காலமாக இப்பழக் கத்தைப் பழகியதால் இதை விட்டு விடுவது அவ்வளவு சுலபமல்ல அப்படி விட எத்தனிக்கும் போது உடலில் பாரிய விளைவுகள் வருவதாக தம்மைக் கூறிக்கொள்கின்றார்கள். வயிற்றில் எரிவு, மலச் சிக்கல், சிறு நீர் கழிப்பதற்கு முடியாமை, பசியின்மை போன்ற பக்க விளைவுகள் வருவதாகக் கூறிக் கொள்ளும் புகை பிடிப்பவர்கள் நாளாந்தம் சிகரட்டின் அளவைக் குறைத்துக் கொள்வதில் பின் நிற்பது ஏனோ?

புகைப்பிடித்தலை நீண்ட நாட்களாகப் பழக்கத்தில் கொண்டவர்கள் பாரிய நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதை மருத்துவ ஆய்விலிருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது. இதனால் சிறு நீரக பாதிப்பு, இருதய நோய், மாரடைப்பு, மார்பு நோய்ச் சளி, மலட்டுத்தன்மை, நரம்புத்தளர்ச்சி, பாலியலில் பலவீனம், புற்று நோய் போன்ற கொடிய வியாதிகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இதுவரை புகைத்தலால் 43 வீதமானவர்கள் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இத்துடன் மரண வீதமும் 9 வீதமாக உயர்த்தப் பட்டிருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன. இத்துடன் புகைத்தல் பழக்கத்தினால் 10 தொடக்கம் 12 வரையான செக்கன்களில் இழப்பு ஒன்றாக இருப்பதாகவும் அறிக்கைகள் தரும் விளக்கங்களாகும்.

இவ்வாறு சிகரட் பாவிக்கப்படுவதினால் நீண்ட காலத்திற்குப் பின் வாந்தி, வயிற்றில் எரிவு, பதட்டம், பசியின்மை இயற்கையாகவே ஏற்பட வாய்ப்புண்டு. புகைத்தலில் காணப்படும் நிக்கோட்டின் எனும் அமிலத்தின் அளவு அதிகப் படுதலினால் இந்நோய்கள் ஏற்பட வாய்ப்பிருக்கலாம். இதனால் குடல் பகுதிகள் பெரிதும் பாதிப்படைந்து குடலில் வளர்ச்சி ஏற்படுவதும் சமிபாடு குறைவதற்கும் காரணிகளாக அமையலாம். எனவே புகைப் பிடிப்பவர்கள் மேற்போந்த காரணங்களை முன் வைத்து புகைத்தல் பழக் கத்தை முற்றாக விட முடியா விட்டாலும் படிப்படியாகக் குறைத்து வருவது உடல் நலத்திற்கு கேடு விளைவிக்காமல் தடுத்து கொள்ளலாம். இத்துடன் சுவாசப்பை இருதயம் போன்றவற்றின் தொழிற்பாடு பெரிதும் பாதிக்கப் படுகின்றது. இருதயத்தின் தொழிற்பாடு அதிகரிக்கப்படும் போது அதிகமான பிராண வாயு தேவையாக இருக்கின்றது. இதனால் மனித இனத்தின் இழப்புக்கள் அதிகமாக ஏற்படுவதற்கும் புகை ஒரு காரணியே. நாளடைவில் நோயை விலை கொடுத்து வாங்குபவர்களாகவே மனித குலம் மாறி வருகின்றது. இன்று மார்பு நோய் சிகிச்சைப் பிரிவுகளில் புகையால் ஏற்படும் பக்க விளைவுகளும் கொடிய நோய்த் தாக்கமுள்ளவர்களுமே நீண்ட அணி வரிசையில் இருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

இத்துடன் புகைப்பிடிப்பவர்கள் தங்களை அழித்துக் கொள்வதோடு மட்டும் நிற்காமல் அண்டை அயலவர்கள், வீட்டில் வாழும் குழந்தைகள் போன்றவர்களும் இக் கொடிய நோயினால் பாதிப்படைவது இவர்களுக்குத் தெரியாது. புகைபிடித்து அவற்றை வெளியில் ஊதி விடுவதனால் பஸ் போன்ற வாகனங்களில் செல்பவர்களும் இப்புகையை சுவாசிக்க வேண்டியேற்படுகின்றது. இதனால் வாழ்க்கையில் புகைப்பிடித்தல் பழக்கத்தைக் கைக்கொள்ளாதவர்களும், புகை பிடிப்பவர்களின் தீய பழக்கத்தினால் சிறிய பாதிப்படைவது சாதாரண விஷயமாகும். இது சூழல் மாசடைவது போன்றவற்றுக்கும் ஒரு காரணியாகலாமல்லவா?


# யுத்த பீதி நீங்க மட்டுநகரில் விசேட யாகம்!

(நமது சிறப்பு நிருபர்)

நாட்டை அச்சுறுத்தி வரும் யுத்தச் சூழல் நீங்கி அமைதியும் சமாதானமும் ஏற்பட இறையருளை வேண்டி விசேட யாகம் எதிர்வரும் 7ஆந் திகதி வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு நாவலடி புதுமுகத்துவாரத்தில் அமைந்திருக்கும் ஸப்தரிஷிகள் மண்டல வளாகத்திலுள்ள யாகசாலையில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஸ்ரீ காயத்ரி பீடாதிபதியும் காயத்ரி சித்தருமாகிய ஸ்ரீமத் ஆர்.கே.முருகேசு சுவாமிகள் தலைமையில் யாகக் கிரியைகள் நடைபெறும்.

இந்தியாவில் மகா சித்தர்களின் சமாதியிலிருந்து பெறப்பட்ட புனித மண் இந்த யாகத்தில் அர்ப்பணிக்கப்பட்டு அங்கிருந்து கொண்டு வரப்படும் உயிர் மூலிகைகளைக் கொண்டு யாகம் விசேடமாக நடத்தப்படும்.



"எனது குரு நாதர் ஸ்ரீ ஈஸ்வரப்பட்டரின் உத்தரவின் பேரில் நம் நாட்டில் யுத்த பீதி நீங்கி சமாதானமும் அமைதியும் நிலவுவதற்காக இந்த யாகம் விசேடமாக ஏற்பாடு செய்யப்படுவதாகவும், இதற்காக மகாசித்தர்களின் புனித சமாதிகளின் மண், உயிர் மூலிகைகளை இந்தியாவிலிருந்து அன்னை இராஜாம்பாள் தலைமையில் அடியார்கள் குழுவொன்று கொண்டு வருவதாகவும் சுவாமி முருகேசு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜுன் ஏழாந் திகதி காலை 9 மணிக்கு இந்த யாக திரவியங்கள் புது முகத்துவாரம் பிரதான வீதியிலிருந்து பக்திப் பரவசப் பவனியாக யாக சாலைக்கு எடுத்து வரப்பட்டு யாகம் நிகழும்.

யாகத்தில் பங்கு பெறும் அடியார்களின் நலன் கருதி போக்குவரத்து மற்றும் அன்னதான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

சித்தர்கள், முனிவர்கள், மகா முனிவர்கள், மகா ரிஷிகள், முதலானோரின் திருநாமங்கள் உச்சரிக்கப்பட்டு இந்த விசேட யாகக் கிரியைகள் இடம் பெறுவதால் அடியார்கள் இந் நிகழ்வைத் தவறவிடாது கலந்து கொள்ளவேண்டும் என ஸ்ரீ காயத்ரி ஆச்சிரமத்தினர் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# ஆசிரியர்களின் சம்பள நிலுவைக்காக 186 மில்லியன் ரூபா ஒதுக்க இணக்கம்!

## தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு அமைச்சர்

(காரைதீவு நிருபர்)

1995 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர்களுக்கு வழங்கப்படாதிருந்து வரும் சம்பள நிலுவைக்காக 186 மில்லியன் ரூபாவை ஒதுக்க நடவடிக்கை எடுப்பதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த உறுதியளித்தார். இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவினர் கடந்த புதனன்று இசுருபாயா கல்வியமைச்சில் அமைச்சரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியது.

சம்பள நிலுவை கிடையாமையினால் எதிர்வரும் க.பொ.த உயர்தர பரீட்சையை ஆசிரியர்கள் பகிஸ்கரிக்க இடமுண்டு என்று சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அமைச்சரிடம் எடுத்துக் கூறினார்.

அமைச்சருடன் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் சிறிசேன விதானகே, ஆலோசகர் எம்.எஸ்.பெரேரா உட்பட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். சங்கத் தூதுக்குழுவில் தலைவர் சி.தண்டாயுதபாணி பொதுச் செயலாளர் த.மகாசிவம், நிதிச் செயலாளர் சி.சரவணபவானந் தன், பத்திரிகை செயலாளர் தி.கணேசராஜா, பிரசாரச் செயலாளர் வி.ரி.சகாதேவராஜா சிரேஷ்ட தலைவர் ச.ஜெயராசா, துணை பொது செயலாளர் த.பஞ்சலிங்கம் உள்ளிட்ட ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் அங்கம் வகித்தனர்.

1999/2000 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான இடர்கால கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென சங்கக் குழுவினர் கேட்ட போது நடவடிக்கை எடுப்பதாக கல்வியமைச்சர் கூறினார்.

# மன்னார், கிளிநொச்சி, திருமலை மாவட்டங்களுக்கு கல்விப்பணிப்பாளர்கள்

(காரைதீவு)

வடக்கு கிழக்கிலுள்ள 08 மாவட்டங்களில் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களுக்கு மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு உரிய அதிகாரங்களும் பரவலாக்கப்பட வேண்டுமென்று சங்கத் தூதுக்குழுவினர் கோரினர்.

கல்வியமைச்சர் பதிலளிக்கையில் ஒரு மாத காலத்துள் இவர்கள் நியமிக்கப்பட்டு கூட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள் என்றார்.

தற்போது சேவையிலுள்ள சகல கடமை நிறைவேற்று உதவிக்கல்விப்பணிப்பாளர்களும் வெகுவிரைவில் நேர்முகப்பரீட்சை மூலம் உள்வாங்கப்படுவார்கள். இதுவரை 63 பதில் உதவிக்கல்விப்பணிப்பாளர்களுக்கு நேர்முகப் பரீட்சை இடம்பெற்றுள்ளது. ஏனையோருக்கும் நேர்முகப்பரீட்சை நடைபெற்ற பிற்பாடே நிரந்தர நியமனம் சகலருக்கும் வழங்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

அதே போன்று 2500 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். விடுபட்ட 39 இ.க.நி.சேவை உதவிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படுமென்று அவர் கூறினார்.

ஒவ்வொரு மாவட்ட கல்வி அலுவலகத்திற்கும் மேலதிக 10 பாடங்களுக்கும் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென சங்கம் கேட்டதற்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்தார்.

பதில் அதிபர்களாக பணியாற்றுவோரும் நேர்முகப் பரீட்சை மூலம் நிரந்தர அதிபர்களாக உள்ளீர்க்கப்படவுள்ளனர். வடகிழக்கில் உடனடியாக நேர்முகப்பரீட்சையை நடாத்த மாகாணக்கல்விப்பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

# அதிபர் சேவையில் சேர்க்க போட்டிப்பரீட்சையில் தெரிவு

(காரைதீவு நிருபர்)

அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த இலங்கை அதிபர்கள் சேவை க்கு சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப்பரீட்சை முடிவுகள் வெளியாகவுள்ளன.

இப்போட்டிப்பரீட்சையில் தெரிவாகவுள்ளவர்களின் விபரம் இ.அதிபர் சேவை தரம் I இற்கு 2850 பேர், தரம் II இற்கு 504 பேரும், தரம் III இற்கு 202 பேரும் தெரிவாக உள்ளனர்.

**தரம் I**:- இ.அ.சேவை தரம் 1இற்கு இலங்கை தமிழரில் 25, முஸ்லிம்களில் 16, இந்தியத் தமிழர்களில் 11, சிங்களவர்களில் 150 பேரும் தெரிவாக உள்ளனர்.

**தரம் II**:- இ.அ.சேவை தரம் 11இற்கு இலங்கை தமிழரில் 62ம், முஸ்லிம்கள் 40, இந்திய தமிழ் 27., சிங்களவர்களில் 375 பேர்களும் தெரிவாக உள்ளனர்.

**தரம் III**:- இ.அ.சேவை தரம் 111 இற்கு இலங்கை தமிழரில் 356, முஸலிம்களில் 356, இந்திய தமிழரில் 156, சிங்களவர்களில் 2137 பேரும் தெரிவாக உள்ளனர்.

திறைசேரி நிதி ஒதுக்கியதும் கல்விச்சேவை ஆணைக் குழு இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்று கல்வியமைச்சின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

# பண்டாரவளையிலிருந்து கொழும்பு வந்த பட்டதாரி ஆசிரியர் எங்கே?

(காரைதீவு நிருபர்)

பண்டாரவளையிலிருந்து கொழும்புக்கு ஒரு வார கால கருத்தரங்கிற்காக வந்த விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் எங்கே?

இவ்வாறு கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தைச் சந்தித்த இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க பொதுச்செயலாளர் த.மகாசிவம் கேள்வியெழுப்பினார்.

இச்சந்திப்பு புதனன்று இசுருபாயாவில் நடைபெற்றது. மாயமான ஆசிரியர் பற்றி மகாசிவம் மேலும் கூறுகையில்:-

பண்டாரவளை ஹல்து முல்லையைச் சேர்ந்த சிதம்பரம் தியாகநாதன் எனும் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி முதல் மார்ச் 2ஆந் திகதி வரை கொழும்பு மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற்ற ஒரு வார கால பயிற்சி நெறியில் கலந்து கொள்ள வந்திருந்தார்.

பண்டாரவளை பூணாகல தமிழ் மகா வித்தியாலய ஆசிரியரான இவர் இரு பிள்ளைகளின் தந்தையுமாவார். மார்ச் 2ஆந் திகதிக்குப் பின் அவர் இன்னும் வீடு வந்து சேரவில்லை. ஆனால் அவரது அளடையாள அட்டை நான்கு நாட்களில் பதிவுத்தபாலில் வீடு வந்து சேர்ந்ததாக மனைவி கூறுகிறார்.

பொலிஸ் நிலையங்களில் விசாரித்தோம், பலனில்லை. இவருக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் பெற்றாரும் உறவினரும் திகைக்கிறோம் என்றார். மிகவும் அவதானத்துடன் அனுதாபமாகக் கேட்ட கல்வியமைச்சர் விசாரிப்பதாக குறிப்பிட்டார்.

# திருமலை ஜம்போரியில் மட்டக்களப்பு சாரணர்கள்

(சந்துரு)

திருகோணமலை சாரண சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜம்போரி சாரண பாசறை திருமலை சங்கமித்த பூங்காவில் இன்று தொடக்கம் தொடர்ச்சியாக ஆறு நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் பாசறையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்தும் சாரணர்கள், சாரணத்தலைவர்கள் உட்பட 90 பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கலந்து கொள்ளும் சாரண அங்கத்தவர்கள் மட்டக்களப்பு சாரண ஆணையாளர் ஜே.எஸ்.பிள்ளை தலைமையில் செல்லவுள்ளனர் என்பதுடன் இப்பாசறைக்கு வந்தாறுமூலை மகாவித்தியாலயம், கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலயம், மட்/மத்திய கல்லூரி, மட்/சென் மைக்கல் தேசியப்பாடசாலை, மட்/சிவானந்தா, பாவக் கொடிச்சேனை, செங்கலடி மத்திய மகாவித்தியாலயம், ஆகிய பாடசாலை சாரணர்கள் இதில் பங்குபற்றுகின்றனர்.

# 18 ஆயிரம் தமிழ் மாணவர்களுக்கு ஆசிரிய ஆலோசகர் எவருமில்லை!

(காரைதீவு நிருபர்)

பண்டாரவளை வலயக் கல்விப்பிரதேசத்தில் 22ஆயிரம் சிங்கள மாணவர்களுக்கு 52 சிங்கள ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அங்கு பயிலும் 18 ஆயிரம் தமிழ் மாணவர்களுக்கென ஒரு தமிழ் ஆசிரிய ஆலோசகர் கூட நியமிக்கப்படவில்லை. என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஊவாமாகாண இணைப்பாளர் எஸ்.பாலசுப்பிரமணியம் கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்திடம் முறையிட்டார்.

சங்கப் பொதுச் செயலாளர் கூறுகையில்:-

"சிங்கள மாணவர்களுக்கு சிங்கள ஆசிரிய ஆலோசகர்கள் இருப்பது போன்று தமிழ் மாணவர்களுக்கு ஏன் தமிழ் ஆசிரிய ஆலோசகர் நியமிக்கப்பட முடியாது? சிங்கள ஆசிரிய ஆலோசகர்கள் எப்படி தமிழ் மாணவரை கண்காணிப்பது?

அடுத்து பண்டாரவளைப் பிரதேசத்திற்கு இருக்கும் ஒரேயொரு தமிழ் மொழி மூல உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி.நடராஜா தமிழிலே பேசுவதற்கோ எழுதுவதற்கோ முடியாதவராக உள்ளார். எனவே பொருத்தமான ஒருவரை நியமித்து தமிழ் பாடசாலை நிருவாகத்தை கவனிக்குமாறு வேண்டுகிறேன் என்றார்.

இப்பாரபட்சம் பற்றி தனக்குத் தெரியாது உடனடி நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் குழுவினருக்கு கூறினார்.



மட்/பூம்புகார் நகரில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவ நிகழ்ச்சிகளில் ஒன்றான கல்யாணக்கால் வெட்டும் வைபவத்தில் கல்யாணக்காலை வெட்டியெடுத்துக் கொண்டு அடியார்கள் ஊர்வலமாக சென்று ஆலயத்தை அடைவதை படங்களில் காண்கிறீர்கள்.

படமும் தகவலும்:- காந்தன்

# இந்தோனேசியாவில் என்ன நடக்கும்? வாஹிட்டுக்கெதிரான கண்டனத் தீர்மானம் நிறைவேறியது

(ஜகார்த்தா)

இந்தோனேசிய ஜனாதிபதி அப்துல் ற.்மான் வாஹிட்டை பதவியிலிருந்து விலக்கக் கோரும் கண்டனத் தீர்மானத்தை நாடாளுமன்றம் அமோக ஆதரவுடன் நிறைவேற்றியிருக்கிறது. ஆனால் தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிராகரித்த அதிபர் பதவி விலகமறுத்துவிட்டார்.

வாஹிட்டின் அரசியல் எதிர்காலத்தை முடிவு செய்ய மக்கள் ஆலோசனை சபைக் கூட்டத்தை அழைக்க நாடாளுமன்றம் வாக்களித்தது.

துணை ஜனாதிபதி மேகவதி கண்டனத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தார். பரவலாக வன்முறையில் ஈடுபட்டு வாகிட்டின் ஆதரவாளர்கள் அச்சுறுத்தியதை அடுத்து இராணுவத்தினர் தெருக்களில் ரோந்து சுற்றி வருகின்றனர்.

இந்தோனேசிய ஜனாதிபதிக்கு எதிராக பாராளுமன்ற கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தாலும் பதவி விலகப் போவதில்லையென்று வாஹிட் அறிவித்திருக்கிறார். இவரைப் பதவி விலகச் செய்வதற்கு மற்றும் சில நாடுகளைப் போல இங்கும் மக்கள் ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்படுமா? அல்லது ஜனாதிபதி வாஹிட் கைது செய்யப்பட்டு அவர் மீது வழக்கு விசாரணை நடைபெறுமா? இந்தோனேஷியாவின் புதிய ஜனாதிபதியாக மேகவதி சுகர்னோ புத்திரி பதவியேற்பாரா?

இந்தோனேஷியாவில் இனி என்ன நடக்குமென்பதே இப்போதுள்ள கேள்வி.

ooo

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

## அமெரிக்கர்கள் பிணைக் கைதிகளாக இருப்பதிலும் அமெரிக்கா உதவுகிறது

(மணிலா)

பதினொரு பிலிப்பைன்ஸ் நாட்டினர் மற்றும் மூன்று அமெரிக்கர்கள் அபூசையா தீவிரவாத போராளிகளினால் பிடித்து வைத்திருக்கும் நிலையில் அமெரிக்கா உதவ முன்வந்துள்ளதை ஏற்கப்போவதாகப் பிலிப்பைன்ஸ் அரசு கூறுகிறது.

அமெரிக்காவின் உதவி குறித்து நேற்று முன்தினம் பிலிப்பைன்ஸின் அதிபர் கலோரியா அரோயாவுக்குத் தெரிவிக்கப்பட்டது.

பிணைக்கைதிகளை விடுவிப்பது பொருட்டு இராணுவ உதவிகள் உட்பட தேவையான மற்ற உதவிகளையும் தாங்கள் செய்யத் தயாராக இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கடத்தல்காரர்களுக்கு எந்தவிதப் பணமோ, அல்லது பேச்சுவார்த்தையோ தமது அரசு நடத்தாது என அதிபர் தெளிவுபடுத்தியுள்ளார். பாதுகாப்புப் பணிகளில் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வந்தாலும் கடத்தல் காரர்கள் ஒழிந்திருக்கும் இடம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

எனினும் பிணைக் கைதிகள் முதலில் காணப்பட்ட மாகுட் தீவுகளில் இருந்து சில பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

கடத்தியவர்கள் பிணைக் கைதிகளை சுலு என்ற புரட்சிக் குழு வசிக்கும் ஜோலோ தீவுக்கு கடத்திச் சென்றுள்ளதாக சில அறிக்கைகள் கூறுகின்றன.

இராணுவ செயற்பாடுகளால் ஜோலோதீவு மக்கள் தங்கள் இடங்களை விட்டு தப்பி வெளியேறியிருக்கின்றனர்.

## மீனை விழுங்கும் ஆஸ்துமா சிகிச்சை

(ஹைதராபாத்)

ஆஸ்மா நோய்க்கு சிகிச்சை பெறுவதற்காக பல நோயாளிகள் ஆண்டுதோறும் ஹைதராபாத் செல்லுகின்றனர்.

சிகிச்சையின் ஒரு பகுதியாக உயிர் உள்ள மீன் ஒன்றின் வாயில் மருந்தை வைத்து நோயாளிகள் அம் மருந்தை விழுங்குவர்கள். அதிக நோயாளிகள் இச் சிகிச்சையைப் பெறச் செல்வதால் ஹைதராபாத்துக்கு விஷேட ரயில் சேவை ஒன்றை நடத்தவுள்ளது.

## ஆபிரிக்காவிற்கு பயணம் மேற்கொள்ளுவது ஆபத்தானது

(வாஷிங்டன்)

மத்திய ஆபிரிக்காவில் பாங்கோயின் நாட்டிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் அமெரிக்கர்களை அவதானமாக இருக்குமாறு அமெரிக்க சட்டமா அதிபர் திணைக்களம் வேண்டியுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் ஏற்பட்ட புரட்சி காரணமாகவே இந்த அறிவித்தலை சட்டமா அதிபர் திணைக்களம் விடுத்துள்ளது.

மேலும் அந்நாட்டிற்கு விஜயம் செய்வதை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.



ஜம்முக் காஷ்மீரின் ஜனநாயக விடுதலைக் கட்சியின் தலைவர் ஷபீர் அஹ்மத்ஷா இந்திய அரசின் சிரேஷ்ட அதிகாரியாக கிரிஷன் சஸ்தன் பந்ததுடன் கைக்குலுக்கிய போது எடுத்த படம். இந்த அதிகாரி காஷ்மீர் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தைக்கான சூழ்நிலை பற்றி காஷ்மீர் போராளிக் குழுக்களுடன் பேசுவதற்காக ஸ்ரீ நகருக்கு வந்திருந்தார்.

## ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(சென்னை)

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கில் ஆஜர் ஆவதற்கு அரச தரப்பு வழக்கறிஞர் இன்னும் நியமிக்கப்படாமையினால் அடுத்த மாதம் 16ம் திகதிக்கு வழக்கை சென்னை நீதிமன்றம் ஒன்று ஒத்திவைத்துள்ளது.

வருமானத்துக்கு அதிகமாக 66 கோடியே 65 இலட்சம் அளவுக்கு ஜெயலலிதா சொத்து சேர்த்ததாக முன்னைய அரசு அவர் மீது வழக்குத் தொடுத்திருந்தது.

செல்வி ஜெயலலிதா மீதான வருமானவரி ஏய்ப்பு வழக்கில் அரச தரப்பு சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய சென்னை எழும்பூர் பெருநகரக் குற்றப் புலனாய்வுப் பிரிவு நடுவர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

கடந்த 1993,1994 இல் தொடரப்பட்ட இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போது வருமான வரித்துறையில் மூன்று துறை ஆளுனரிடம் குறுக்கு விசாரணை நடத்த நீதிபதி ராமலிங்கம் அனுமதி வழங்கினார்.

## பரிதியை சிறையில் தொடர்ந்து வைக்க எடுத்த முயற்சி தோல்வி

(சென்னை)

மே மாதம் 10ம் திகதி தேர்தல் வாக்குப் பதிவு நாள் அன்று நடந்த சம்பவம் தொடர்பாக முன்னாள் சட்டசபை பேரவைத் துணைத்தலைவர் மற்றும் தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம் வழுதிக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட மூன்று வழக்குகளிலும் நீதிமன்றம் அவருக்கு நேற்று முன் தினம் பிணையில் செல்ல அனுமதியளித்தது.

பரிதிக்கு முதன்மை அமர்வு நீதிமன்றம் அளித்த ஜாமீன் அனுமதியை ரத்துச்செய்யக் கோரி மாநில அரசு தாக்கல் செய்த மனுவை சென்னை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜரான, பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பரிதி இளம் வழுதி இது நீதிக்குக் கிடைத்துள்ள வெற்றியாகும் எனக் குறிப்பிட்டார்.

## கடத்தல் காரர் ஒருவர் கைது

(வாஷிங்டன்)

மெக்ஸிகோவில் இருந்து அரிசோனா பாலைவனத்தின் ஊடாக அமெரிக்காவிற்குச் சட்டவிரோத குடியேற்றக்காரர்களை கடத்தும் ஒருவரை அமெரிக்கப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அண்மையில் அரிசோனா பாலைவனத்தில் நடைபெற்ற 14 பேரின் மரணத்தினைத் தொடர்ந்து அமெரிக்கப் பொலிஸார் நடத்திய சோதனையை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



(படமும் தகவலும் காந்தல்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மண்முனை வடக்குப் பிரதேச சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த "இளைஞர் தின விழா" விற்குப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா, விசேட அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாணப் பணிப்பாளர் பொன்.செல்வநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும், இவ் வைபவத்தில் கலந்துகொண்ட இளைஞர், யுவதிகளில் ஓர் பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# வாரம் ஒரு பாடசாலை

# உ வெஸ்லி உயர்தரப் பாடசாலை

## — கல்முனை —

கல்முனை நகரின் மத்தியில் அமைந்து 118வது ஆண்டில் பவனி வரும் கமு/உவெஸ்லி உயர்தரப் பாடசாலை "முற்றாய் உயர்ச்சிக்கே" (Utmost For The Highest) என்ற பாடசாலையின் மகுட வாக்கியத்திற்கிணங்க, உயர்ந்து செல்ல ஏணியாகவும், இன ஒற்றுமைக்கு பாலமாகவும் திகழ்வதோடு இப்பிராந்தியத்தில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை என்ற பெருமைக்கும் உரியதாகும்.



கமு/உவெஸ்லி உயர்தரப் பாடசாலை முதல்வர் பொன்.முருகையா

## பாடசாலையின் வரலாறு

1814ஆம் ஆண்டு ஆனி மாதம் 29ம் திகதி இலங்கைக்கு வந்த மெதடிஸ்த மிஷனரிகள் தாங்கள் கால் பதித்த பல இடங்களில் கல்விப் பணியாற்றினர். அந்த வகையில் கல்முனை மெதடிஸ்த மிஷனரிகளால் பெண்கள் விடுதிப் பாடசாலை "அருட் திரு ஜோர்ஜ் ரிம்மா" என்பவரின் பணிக்காலத்தில் 30, கார்த்திகை 1883இல் ஆரம்பிக்கப்பட்டது. இக் காலத்தில் இங்கு கல்வி பயின்ற மாணவிகளின் எண்ணிக்கை 18 ஆக காணப்பட்டது.

இங்கு வெளிநாட்டு மிஷனரிகள் அதிபர்களாக கடமையாற்றிய போதும், தலைமையாசிரியர்களாக உள் நாட்டவர்கள் கடமையாற்றினர். அவர்களில் திருமதி.ஜெசி ஜேசுதாசன் (1906 - 1932), கிரேஸ் தில்லையம்பலம் (37 ஆண்டுகள்) ஆகிய பருத்தித்துறையைச் சேர்ந்த இருவரும் குறிப்பிடத்தக்கோராவர்.

தமிழ் மொழி மூலமான கல்வியே பிரதானமாக கற்பிக்கப்பட்டாலும் ஆங்கில மொழிக் கற்பித்தலுக்கு முக்கிய இடம்



கல்விப் பொதுத்தராதர (உ-த) 2000ம் ஆண்டு மாணவர்களுக்கான ஜனாதிபதியின் விசேட புலமைப்பரிசில் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட உவெஸ்லி உயர்தர கல்லூரி மாணவர்களும், அதனை வழங்கி வைத்த பிரதி கல்வி அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா மற்றும் கல்லூரி பிரதி அதிபர் வீ.பிரபாகரன் ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம்.

கொடுக்கப்பட்டது. இவ்வேளையில் (1930இல்) இப்பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை 80ஆகவும் விடுதியில் தங்கியிருந்து கற்றோர் தொகை 100 ஆகவும், ஆசிரியர்களின் தொகை 10 ஆகவும் காணப்பட்டது.

## பெயர் மாற்றங்களும் வளர்ச்சிப் படிகளும்

1901ம் ஆண்டு "அருட் திரு கபிரியேல் லீஸ்" என்பவரின் ஞாபகார்த்தமாக இங்கு ஆண்களுக்கான ஆங்கில மொழிப்பாடசாலை "லீஸ் ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை" என உருவாக்கப்பட்டது. இது பல கல்விமான்களை உருவாக்கியது.

பின்னர் 1953 மே மாதம் பெண்கள் விடுதிப் பாடசாலையும், லீஸ் ஆண்கள் பாடசாலையும் ஒன்றிணைக்கப்பட்டு மெதடிஸ்த திருச்சபையின் ஸ்தாபகரான "அருட் திரு ஜோன் உவெஸ்லியின் ஞாபகார்த்தமாக உவெஸ்லி உயர்தரப் பாடசாலையாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் முதலாவது அதிபராக லீஸ் பாடசாலையின் ஆங்கில ஆசானாகிய "ஜோர்ஜ் நல்லதம்பி" 1954 வரை கடமையாற்றினார். பின் கலைப்பட்டதாரியான சாம்.ஜே.வில்சன் கடமையாற்றிக் கொண்டிருக்கையில் 1959இல் 2 வருட மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்ற போது மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையில் இருந்து திருமதி.ஆர். சின்னையா அவர்கள் சேவையில் இணைந்து கொண்டார். ஏற்கனவே இருந்த சிறிய இரசாயன ஆய்வு கூடத்துடன் 1959 இல் விஞ்ஞான கூடமும் அமைக்கப்பட்டது. பாடசாலை தரமுயர்த்தப்படுவதற்கான அடிப்படையை ஏற்படுத்தியது.

1961 இல் நாடு திரும்பிய எஸ்.ஜே.வில்சன். அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பெடுத்த காலம் முதல் 1972 வரை அதிபராக கடமையாற்றினார். வில்சன் அவர்களுடன் திருமதி.வில்சன் அவர்களும் ஆற்றிய சிறப்பான பணி இன்றும் பலரால் நினைவு கூறப்படுகின்றது.

1972 முதல் 1983 வரை அதிபராக கடமையாற்றிய யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் சமூகம், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என சகல மட்டங்களுடனும் தொடர்பை ஏற்படுத்தி பாடசாலையின் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை திறம்பட நடாத்திச் சென்று கிழக்கில் தலை சிறந்த பாடசாலையாக உவெஸ்லியை உருவாக்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் 1981 - 1982 காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம்.ஏ.அப்துல் மஜித் அவர்களின் செயலாளராக கடமையாற்றிய போது கே.சுப்பிரமணியம், எஸ்.மகாலிங்கம், (தற்போதைய வடகிழக்கு மாகாணக் கல்வித் திணைகள மேலதிக கல்விப் பணிப்பாளர்) கடமையாற்றினார்கள். பின்னர் 1983 இல் மீண்டும் சேவையில் இணைந்த யோகம் வேலுப்பிள்ளை அவர்களின் இறப்பு பாடசாலையைப் பொறுத்த வரை பேரிழப்பாகவே அமைந்தது.

### — அகதி —

நான் நீ என்று நாம்
இருக்கவில்லை
தேனும் வதையுமாய்
தினம் தினம்
வளர்ந்து வந்தோம்
யார் செய்த பாவங்கள்
விதி செய்த சதியோ
பச்சிளம் மணிகள் பசியால்
தவியாய்த் தவிக்கின்றோம்
பார்க்கும் நம் இதயங்கள்
ஓடிந்து போகின்றன
வீடின்றி நாடின்றி!
தாய் தந்தையின்றி!
பந்த பாசமின்றி!
காட்டுக்குள் பல காலங்கள்
உருண்டே போனது
எம் வாழ் நாட்கள்
சீரில்லா வாழ்க்கையால்
சில காலங்களிலேயே
சீரழிந்து போனது நம் வாழ்வு!
எதுவுமில்லாத எமக்கு
உலகம் இட்ட பெயர்
அகதி.....அகதி

**செ.பாக்கிநாதன்**
**உயர்தர பிரிவு**
**உவெஸ்லி உ.பா**

அதன் பின்னர் 1988 வரை கே.சுப்பிரமணியம் அவர்கள் கடமையாற்றினார்.

பின்னர் 1988 இல் வெங்கடாசலம் அவர்கள் உவெஸ்லியின் அதிபராக சேவையில் இணைந்து கொண்டார். இவர் லீஸ் ஆங்கிலப் பாடசாலையின் பழைய மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் சேவைக் காலத்தில் பல்வேறு தரப்பினர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி பாடசாலையின் பௌதீக அபிவிருத்தியிலும், கல்வி அபிவிருத்தியிலும் கவனம் செலுத்தினார். லீஸ் பாடசாலையின் பழைய மாணவரான முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம்.மன்சூர், உவெஸ்லியின் பழைய மாணவரான எம்.எச்.எம்.அஷ்ர.ஃ.ப் ஆகியோரின் துணையுடன் மூன்று மாடிக் கட்டிடங்கள் இரண்டும், மூன்று மாடி விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைத்தமையும் பல்வேறு முகாமைத்துவ திறனை தன்னகத்தே கொண்டு பாடசாலையை நடாத்திச் சென்றமையும் உவெஸ்லியின் பயணத்தில் ஒரு மைல்கல் ஆகும்.

1998இல் கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட போது பிரதி அதிபராக கடமையாற்றிய பொன். முருகையா அதிபராக கடமையேற்று இன்று வரை அவரது பணிகளைத் தொடர்கிறார்.

இப்பாடசாலையின் பெண்கள் விடுதிப் பாடசாலையில் இருந்து முதலில் ஆசிரியராக உருவானவர் குறுமன் வெளியைச் சேர்ந்த மேரி சீனித்தம்பி என்டஸ் ஆவார். லீஸ் ஆண்கள் பாடசாலையில் கல்வி கற்றவர்களில் அமரர் இலக்கிய கலாநிதி புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எம்.முஸ்தபா, எம்.சீ.அகமட், ஏ.ஆர்.எம்.மன்சூர் ஆகியோர் மற்றும் உவெஸ்லியின் பழைய மாணவர்களான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர.ஃ.ப், பொன்.செல்வராசா (நாடாளுமன்ற உறுப்பினர்கள்), உவெஸ்லி மாணவர்களின்



கமு/உவெஸ்லி உயர்தரப்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்

வளர்ச்சிக்கு அன்று முதல் இன்று வரை ஊக்கமளித்து வந்திருக்கிறார்கள். அந்த வகையில் உவெஸ்லியின் பாராளுமன்றத்தை அமைத்து மாணவர்களுக்கு ஊக்கமளித்த அதிபர்.செபாரெத்தினம் மற்றும் உவெஸ்லியின் பாராளுமன்றத்தில் பிரதம அமைச்சராக இருந்த பழைய மாணவன் எம்.எச்.எம்.அஷ்ர.ஃ.ப் மற்றும் வித்துவான் கே.ஞானரெத்தினம், கே.குணரெத்தினம், திருமதி. என்.ஜெகநாதன், திருமதி.ஐ.எஸ். அற்புதநாதன், பு.செல்லத்தம்பி, மு.செல்வராசா, திருமதி.ஆர். தேவரெட்ணம் போன்றோர் இன்றும் பலரின் நினைவில் நிற்கின்றனர்.

## பாடசாலையின் நிவர்த்தி செய்ய வேண்டிய குறைகள்

லீஸ் பாடசாலையின் கட்டிடமாக திகழ்ந்த பழைய மெதடிஸ்த ஆலயம் பழைமை குன்றாமல் திருத்தப்பட வேண்டியது அவசியமாகும். பிரதான வீதியின் அருகே நீண்ட காலமாக திருத்தத்திற்காய் ஏங்கி நிற்பது கவனத்திற்கு எடுக்கத்தக்கது. அவ்வாறே நூற்றாண்டுகளைத் தாண்டி இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கும் சில கட்டிடங்கள் புனரமைக்கப்பட வேண்டும். 1990ம் ஆண்டு வன்செயலில் அகதிமுகாம்கள் அமைக்கப்பட்டு உவெஸ்லியின் விளையாட்டு மைதானம் குன்றும் குழியுமாக சுற்று மதில் இல்லாமல் இருப்பது பெரும் குறையாகவே உள்ளது.

கல்முனை நகரின் மத்தியில் அமைந்திருப்பதால் சமூகத்திற்கு பயன்படக்கூடியதான "பெரிய மண்டபம்" இங்கு அமைக்க வேண்டும் என்ற மறைந்த அமைச்சர் அஷ்ர.ஃ.ப் அவர்களின் திட்டம் அவரின் மறைவுடன் கிடப்பில் போடப்பட்ட நிலையில் உள்ளது.

1700 மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலையில் 55 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். தமிழ், வணிகக் கல்வி போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக் குறை நிலவுகின்றது. இவ்வாறு கல்முனை நகரில் அமைந்த பாடசாலையில் ஆசிரியர் பற்றாக் குறை காணப்படுவது கல்வித் திணைக்களத்தின் சிரத்தையீனமே காரணமாகும்.



கிறிஸ்து ஜெயந்தி விழாவின் போது சிறுவர்களின் நாடகத்தின் ஒரு காட்சி

*****

(6ம் பக்கம் பார்க்க)

**தொகுப்பு:-**
**பு.கேதீஸ்**
**(பாண்டிருப்பு நிருபர்)**
**தகவல்:-**
**வீ.பிரபாகரன்**
**(பிரதி ஆசிரியர்)**
**படப்பிடிப்பு:- சூரி**

# கல்வி நிலையங்களிலுள்ள இராணுவ முகாம்கள் பற்றி நடவடிக்கை எடுக்க அமைச்சர் சம்மதம்

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கில் சுமார் 100 பாடசாலைகளில் இராணுவ முகாம்கள் முழுதாக அல்லது பகுதியாக இயங்கி வருவது கற்றலுக்கான ஆரோக்கியமான சூழ் நிலையல்ல. ஆகவே அவை அகற்றப்பட வேண்டும் என்று தமிழ் ஆசிரியர் சங்கக் குழுவினர் கல்வி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இது தொடர்பாக இராணுவ உயரதிகாரிகளுடன் பேசி முடிவெடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார். மாணவர் பாடசாலையினுள் பிரவேசிக்கும் போது துப்பாக்கி முனையை தரிசிப்பது உளத்தாக்கத்தை ஏற்படுத்துமென சங்கச் செயலாளர் த.மகாசிவம் சுட்டிக்காட்டினார்.

### தடுத்து வைப்பு

விசாரணையின்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள 100 தமிழ் ஆசிரியர்களின் விடுதலைக்கு அமைச்சர் உதவ வேண்டுமென குழு கேட்டுக் கொண்டது. அநாவசியமாக விசாரணையின்றி கைதாவதை தான் உடனடியாக தலையிட்டு தீர்த்து வைப்பதாக அவர் சொன்னார்.

### விசேட கல்வி

வடக்கு கிழக்கு மாகாணத்தில் விசேட கல்விக்கென சிங்கள உதவிக்கல்விப்பணிப்பாளர் (மல்காந்தி) ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார்.

வடகிழக்கு தமிழ் மாணவர்களே கூடுதலாக பாதிக்கப்பட்டு விசேட தேவைக்காக காத்திருக்கின்றனர். அவர்களுக்கு விசேட கல்வி வழங்க தமிழ் உதவிக் கல்விப்பணிப்பாளர் நியமிக்கப்பட வேண்டுமென சங்கம் கேட்டதற்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்தார்.

## கன்னங்குடாவில் சிரமதானம் மூலம் பாதை புனரமைப்பு

(அரியம்)

படுவான்கரைப்பகுதியில் உள்ள கன்னன்குடா குறிஞ்சாமுனை பாதைகள் பள்ளமும் குழியுமாகவுள்ளது. இதனை பல தடவைகள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறியும் எது வித பயனும் கிடையாமையினால் அப்பகுதியில் உள்ள பொது அமைப்புக்களின் உதவியுடன் பொது மக்களைக் கொண்டு சிரமதானம் மூலம் அப்பாதைகள் செப்பனிடப்பட்டது.

கன்னன்குடாப்பகுதி பொது மக்கள் தமது உழவு இயந்திரத்தின் மூலம் கிறவல் எடுத்து பாதை செப்பனிடப்பட்டது.

அண்மையில் இச்சிரமதானம் இடம் பெற்றமையால் தற்போது சுமார் ஒரு கிலோ மீற்றர் பாதை செப்பனிடப்பட்டுள்ளது.

கடந்த 1970ஆம் ஆண்டு மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இராஜன் செல்வநாயகம் காலத்தில் செப்பனிடப்பட்ட பல பாதைகள் இன்னும் சீரமைக்காமல் உள்ளதாக கன்னன்குடா பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## அமிர்தகழி புன்னைச்சோலை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் தீர்த்தக்குளத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து சிறப்பாக சடங்குகள் நடைபெற்று 6ஆந் திகதி புதன் கிழமை காலை திருக்குளிர்த்திபாடும் வைபவத்துடன் நிறைவு பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.



**ஆராய்ச்சி அறிஞர் மர்ஹூம் ஜே.எம்.எம்.அப்துல் காதிர் எழுதிய "இலக்கிய இன்பம்" நூல் அறிமுக விழா மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) அஷ்ர.ப் மண்டபத்தில் கல்லூரி அதிபர் ஏ.எஸ்.மீரா முகைதீன் தலைமையில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம். ஹனிபா (மருதூர்க்கனி) சிறப்புப் பிரதி ஒன்றை செய்தியாளர் நளீம் எம்.பத்ருதீனுக்கு கையளிப்பதையும் அருகில் இடமிருந்து வலமாக அறிமுகவுரையை நிகழ்த்திய தாஜூல் அதிப் கலாபூஷணம் எஸ்.ஏ.ஆர்.எம்.செய்யது ஹஸன் மௌலானா, கௌரவ அதிதி கல்முனை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பன்னூலாசிரியர் டாக்டர் எஸ்.நஜிமுதீன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.**

**(படம்:-மருதமுனை எம்.ஐ.எம்.வலீத்)**

## சுவாமி விபுலானந்தர் நினைவுப் போட்டிகள்

(பழுகாமம் நிருபர்)

களுதாவளை விபுலாநந்த இந்து கலாசார பொதுப்பணி இயக்கம் சுவாமி விபுலாநந்தர் நினைவு தின விழாவை வருடந் தோறும் கொண்டாடி வருகிறது. இதற்கமைய இவ்வருடமும் இவ் விழா கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு இவ்வியக்கத்தால் வருடந்தோறும் பாடசாலை மாணவர்களின் ஆளுமையினை விருத்தி செய்யும் நோக்குடன் நடாத்தி வரும் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகளை இம்முறையும் நடாத்தவுள்ளது. இப்போட்டிகள் மேற்பிரிவு, மத்திய பிரிவு, ஆரம்பப் பிரிவு என மூன்று பிரிவாக நடாத்தப்படவுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் குறித்த போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப் படவுள்ளன. ஆரம்ப, மத்திய பிரிவுகளுக்கு பேச்சு, கட்டுரைப் போட்டிகளும் மேற்பிரிவுக்கு இவற்றுடன் கவிதைப் போட்டியும் நடாத்தப் படவுள்ளது. மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் பாடசாலை மட்டத்தில் கோரப்பட்டுள்ளன. ஒரு பாடசாலையில் இருந்து மூன்று மாணவர்கள் மட்டுமே பங்கு பற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகள் யாவும் எதிர்வரும் 10ஆந் திகதிக்கு முன் நடைபெறும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

## கொக்கட்டிச்சோலை வைத்திய முகாமில் மூவாயிரம் பேர் நன்மை பெற்றனர்

(அரியம்)

கொக்கட்டிச்சோலையில் இடம் பெற்ற இலவச வைத்திய முகாமில் மூவாயிரம் பொது மக்கள் நன்மையடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிறு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ இராமகிருஷ்ண தமிழ் மகா வித்தியாலயத்தில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பவள விழாக் குழுவின் அனுசரணையுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இருதய நோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி வே.விவேகானந்தராஜா தலைமையில் இருபது வைத்தியர்களும் பல தாதிகளும் கலந்து கொண்டனர்.

படுவான் கரைப்பகுதியில் வைத்திய வசதிகள் இன்றி தத்தளிக்கும் மக்களுக்கு கொக்கட்டிச்சோலையில் இடம் பெற்ற இவ் வைத்திய முகாம் பெரிதும் உதவியுள்ளது.

இவ் வைத்திய முகாமில் ஒரு மாதக் குழந்தை தொடக்கம் எண்பது வயது முதியவர் வரை பலவேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

நோயாளர்களுக்கான பல இலட்சம் பெறுமதியான மருந்துப் பொருட்கள் இராம கிருஷ்ண மிஷன் பவள விழாக்குழுவினரால் கொள்வனவு செய்யப்பட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கப் பட்டது.

இவ் வைத்திய முகாமில் மட்டக்களப்பு இராம கிருஷ்ண மிஷன் சுவாமிகள் உட்பட பவள விழாக்குழு உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையில் இடம் பெற்ற இவ் வைத்திய முகாமிற்கு சென்றவர்களை பட்டிப்பளை பிரதேச செயலாளர் மா.உதயகுமார், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.மகேஸ்வரலிங்கம் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் அ.இராசதுரை வண்ணக்கர் உட்பட பலரும் வரவேற்றனர்.

இவ்வாறான வைத்திய முகாம் மாதம் ஒரு முறையாவது மட்டக்களப்பில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் கொக்கட்டிச்சோலையில் நடத்தப்பட வேண்டும் என பட்டிப்பளை பிரதேச செயலாளர் மா.உதயகுமார் வேண்டுகோள் விடுத்தார்.

### சிகிச்சை பெற்ற நோயாளிகள்

வைத்திய கலாநிதி வே.விவேகானந்தராசா தலைமையில் வைத்தியர்கள், தாதிமார்கள், உதவி மருத்துவர்கள் கலந்து கொண்ட இம்முகாமில் சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் பெறுமதியான மருந்துகளும் பாவிக்கப் பட்டதாக பவள விழாச் செயலவையின் துணைச் செயலாளர் அறியத்தந்துள்ளார்.

இதில் சிகிச்சை பெற்ற நோயாளிகளும், அவர்கள் சிகிச்சை பெற்ற பிரிவும் வருமாறு:-

மார்புச்சிகிச்சை:- 85 பேர்
மகப்பேற்றுச் சிகிச்சை:- 95பேர்
காது மூக்கு தொண்டை:- 135பேர்
பற்சிகிச்சை:- 262பேர்
குழந்தைகள் சிகிச்சை:- 396பேர்
பொது வைத்தியம்:- 2027பேர்

பவள விழாக் குழு சார்பில், இம்முகாமில் சுவாமி அஜராத்மானந்தஜீ சுவாமி தற்பரானந்தஜீ, துணைச் செயலாளர் ச.சந்திரகுமார், ஆகியோருடன் உறுப்பினர்களான எஸ்.எம். மனோகரன், எஸ்.மகேந்திரனும், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.வடிவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 'மாகாண சபை தென்கிழக்கு அலகு என்றவர்கள் இன்று கேட்பது என்ன?'

-"மயோன் முஸ்தபா"-

திகாமடுல்ல மாவட்ட தேசிய ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திசாநாயக்க கல்முனை கரையோர மாவட்டத்துக்கு பலத்த எதிர்ப்பைத் தெரிவித்து வருவதுடன், மக்கள் எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்த வதற்கு ஏற்பாடு செய்து வருகின்றார். இந்நிலையில் ஐ.தே.க. எம்.பி.தயாரத்னவே இதனை எதிர்த்து வருகின்றார் என்று கூறி வாக்கு வேட்டை நடாத்திய முஸ்லிம் காங்கிரஸ் கல்முனை மாவட்டத்தை எவ்வாறு வென்றுத் தரப்போகின்றது. முடியுமானால் மு.கா. தலைமைத்துவம் இதனைச் செய்து காட்டட்டும். என ஐ.தே.க செயற்குழு உறுப்பினரும், கட்சியின் கல்முனைத் தொகுதி அதிகார சபைத் தவிசாளருமான எம்.எம்.மயோன் முஸ்தபா சவால் விடுத்துள்ளார்.

கல்முனை ஐ.தே.க. ஆதரவாளர்கள் ஒன்று கூடல் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே மயோன் முஸ்தபா இவ்வாறு சவால் விடுத்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்

அது மட்டுமலலாது 1994 பொதுத் தேர்தலின் போது சந்திரிகாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் கரையோர மாவட்டக் கோரிக்கையை இடம் பெறச் செய்திருக்கலாம். சென்ற பாராளுமன்றத்தில் பொதுஜன முன்னணி அரசின் பங்காளிக் கட்சியாக ஆறு வருடங்கள் காலம் கடத்திய சந்தர்ப்பத்திலாவது இக்கரையோர மாவட்டத்தைப் பெற்றிருக்கலாம். இக்காலகட்டங்களில் அதற்காக எவ்வித முயற்சியும் செய்யவில்லை. காரணம் அவ்வாறான யோசனை எதுவும் முஸ்லிம் காங்கிரஸிடம் இருக்கவில்லை என்பது தான் உண்மை.

மு.கா.தயாரத்னாவை முன்னிறுத்தியே இனவாதப் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றது. இந்த தயாரத்னாவுக்கு தற்பொழுது என்ன அதிகாரம் இருக்கிறது. கரையோர மாவட்டத்தை ஏற்படுத்துவதை இவரால் எவ்வாறு தடுக்க முடியும். அவர் ஆதரித்தால் தான் என்ன, எதிர்த்தால் தான் என்ன, அதற்குரிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய வேண்டியது தானே! மு.கா. அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டு என்ன செய்கின்றது? என்றார்.

## வாரம் ஒரு பாடசாலை........

*(5ம் பக்க தொடர்ச்சி)*


### பாடசாலையின் அமைவிடம்

கல்முனை நகரின் மத்தியில் அமைந்துள்ள இப் பாடசாலையின் தெற்கே சந்தையும் வடகிழக்கே பெண்கள் விடுதியும், வடக்கே மெதடிஸ்த ஆலயமும், விளையாட்டு மைதானமும் அமைந்துள்ளதுடன் சற்று தொலைவில் பஸ் நிலையமும் அமைந்துள்ளது.

118 வது ஆண்டில் நடைபவனி வரும் இப் பாடசாலை தற்போது அதிபர் பீ.முருகையா தலைமையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த (சா-த), க.பொ.த.(உ-த) போன்ற பகிரங்க பரீட்சைகளிலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் சிறப்பாக மாணவர்களின் திறமைகள் வெளிக் கொணரப்படுவது தொடர்ந்தும் அனைவரின் ஒத்துழைப்போடு இதனை உருவாக்கிய பெருமக்களின் தரிசனத்தை நிறைவேற்றும் என்று உறுதியாகக் கூறலாம்.

நவீன உலகின் நவீனத்திற்கேற்ப உடைகள் தயாரிக்க சிறந்த இடம்

வெல்கம் டெய்லர்ஸ்



2B, பொலிஸ் வீதி
(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)
பிரதான வீதி,
கல்முனை




# விளையாட்டு விழாக்கள் மூலம் தமிழ், முஸ்லிம் உறவுகளை ஏற்படுத்த முடியும்

## -கல்விப் பிரதியமைச்சர் உரை-

(அட்டாளைச்சேனை நிருபர்)

"தமிழ், முஸ்லிம் மாணவர்கள் என்று பிரிக்கப்பட்டு கல்வி கற்கும் மாணவர்களை ஒற்றுமையாக ஒரே மைதானத்தில் நட்புடன் ஒருவரையொருவர் சந்தித்து சிநேக உறவுகளை ஏற்படுத்துவதற்கு விளையாட்டுப் போட்டிகள் உறுதுணை புரிகின்றன." இவ்வாறு பிரதிக் கல்வியமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா கூறினார்.

அண்மையில் அக்கரைப் பற்று வலயக்கல்விக் காரியாலயத்துக்குட்பட்ட அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில், அட்டாளைச்சேனை போன்ற கோட்டமட்ட பாடசாலைக்கிடையிலான இறுதி விளையாட்டு விழா வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.தௌபீக் தலைமையில் அக்கரைப்பற்று தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய கல்விப் பிரதி அமைச்சர்

கலை உணர்வுகள் உள்ள ஆசிரியர்கள் இருக்கின்ற வெவ்வேறு பாடசாலைகளில் அவர்களுடைய அபிலாசை, மனவெளிப்பாடு, கலை உணர்வு, தொழில்நுட்பங்களை வைத்துக்கொண்டு மாணவர்களைப் பழக்கி இங்கு கொண்டு வந்தமையினால் மிகவும் திருப்தி கரமாக நிகழ்ச்சிகள் இருந்தது. இவைகளை நாம் காண்கின்ற போது அளிக்கம்பை மாணவர்களும் அதற்குச் சமனாக, சமாந்திரமாக அழகாகவும் இங்கு வருகை தந்தனர்.

அளிக்கம்பை பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் நினைத்தால் வருங்கால சந்ததியினர்களான மாணவர்களை சரியான வழிகாட்ட முடியும் என்பதற்கு இந்த விளையாட்டு விழா ஒரு சான்றாகும்.

மாணவர்களுக்கு இவ் விழா அவர்கள் மரணிக்கும் வரை நெஞ்சிலே பசுமையாக இருக்கும்.

ஆகவே, கல்வி அதிகாரிகள் இன்னும் இதய சுத்தியோடு செயற்பட்டால் கட்டுப்பாடான சமூதாயத்தை மேலும் உருவாக்க முடியும். உண்மையில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் கலந்து கொண்டு மிகவும் சிறப்பாக நடந்தேறிய இவ்விளையாட்டு வரலாற்றில் பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகும். இன்னும் பத்து வருடங்களில் தமிழ் இளைஞனுக்கு முஸ்லிம் நண்பனும், முஸ்லிம் இளைஞனுக்கு தமிழ் நண்பனும் இருக்க முடியாது என்பதற்கமைய கல்வி ரீதியாகவும், சமூக ரீதியாகவும் எங்களுக்குள் நாம் பிரிந்து கொண்டிருக்கிறோம்.

இப்பிரதேசத்தில் வாழப்போகும் மக்கள் தலைவர்கள் எல்லோரும் ஒரு ஆபத்தான நிலையில் வாழ்வதை நீங்கள் உணராவிட்டாலும் இன்னும் பல ஆண்டுகளுக்குப் பிறகு நாமெல்லோரும் இல்லாத நேரம் அன்று வாழப்போகும் மக்கள் தமிழில் பேசிய தமிழ், முஸ்லிம் சமூதாயத்தைப் பிரித்து விட்டார்கள் என்று சலித்துக் கொள்ளப்போகிறார்கள்.

எனவேதான் இன்று எமக்கு இருக்கின்ற ஒரேவழி விளையாட்டு விழாக்கள் மூலம் தமிழ், முஸ்லிம் உறவுகளைப் பலப்படுத்தி சினேக உறவுகளை ஏற்படுத்த முடியும். இந்த தென் கிழக்குப் பிராந்தியத்திலே பெயருக்காகவும், கடமைக்காகவும் விளையாட்டு விழாக்கள் நடாத்தப்படுவது நிறுத்தப்பட்டு இதய சுத்தியான உயிரோட்டமுள்ள சினேக பூர்வமான விளையாட்டுப் போட்டிகள் மிகவும் திறமையாகத் தேசிய ரீதியில் மிகவும் பிரபல்யமாக நடாத்தப்பட்டு வருகின்றது. பிரதிக்கல்வியமைச்சர் என்ற வகையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த விளையாட்டுப் போட்டிக்கு உழைத்தவர்கள் யாவரையும் வாழ்த்துகிறேன் எனவும் கூறினார்.

இவ் விழாவில் உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம் .ஹாசீம், கல்விக் கல்லூரி பீடாதிபதி ரசூல் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆதம் லெவ்வை, உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ரவூப், ஆசிரிய ஆலோசகர்கள் ஜெமீல், தவராசா உட்பட பல கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# கராத்தே ஆசிரியருக்கு கௌரவம்!

(நமது நிருபர்)

இலங்கை கராத்தே சம்மேளனத்தால் கடந்த மே மாதம் 13ம், 14ம் திகதிகளில் கல்முனையில் நடைபெற்ற கராத்தே சுற்றுப் போட்டியில் ஏ.ஜோசப் அதிபர் தலைமையில் **I.P.K.A SEEDO - KAIDAN** எனும் கராத்தே அமைப்பின் சார்பில் மட்டக்களப்பு இருதயபுரத்தில் இருந்து கலந்து கொண்ட மாணவர்கள் சம்பியனாக வெற்றிபெற்று சர்வதேசப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதனை முன்னிட்டு மாணவர்கள், பெற்றோர், சார்பில் ஆசிரியர் ஏ. ஜோசப் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர்.



**படத்தில் ஆசிரியர் ஏ.ஜோசப் உட்பட வெற்றி பெற்ற மாணவர்கள் இடமிருந்து வலமாக (மேல்) எம்.பாரதிதாசன், எம்.கண்ணதாசன், ரீ.ராஜூ, எஸ்.சுஜீகாந், வி.பூபாலராஜா, பி.பிரேமானந்த், எஸ். சுரேஸ், இடமிருந்து வலமாக (கீழ்) பி.கஜேந்திரன், ஏ.அன்றசன், ஏ.கோகுலன், கே.அனோஜன், டி.சரவணன், ஜி.தங்கவடிவேல் ஆகியோரைக் காணலாம். இவர்களுடன் எம்.ஜொய்சன், டி.எமில், எஸ்.கிசோகுமார், இவர்களும் கலந்து கொண்டு வெற்றி பெற்றார்கள்.**

# பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டி

(வெற்றி)

இன வன்முறைகள், தொடர்கின்ற யுத்தம், உயிர் உடமை இழப்புகள், அலைமோதும் அகதிவாழ்க்கை போன்ற எரிகின்ற பிரச்சினைகள் தோற்றுவித்த கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்களை மறந்து, எதிர்காலத்தில் இன ஐக்கியத்தையும், சமாதானத்தையும் உலகளாவிய ரீதியில் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்ப மாணவர் சமுதாயத்தை ஊக்குவிக்கும் முகமாக 'கரிடாஸ் ஸ்ரீலங்கா' (செடெக்) தேசிய நிறுவனம் மாவட்டங்கள் ரீதியாக பாடசாலைகளுக்கிடையே நாடகப் போட்டியொன்றை நடத்த முன்வந்துள்ளது.

க.பொ.த.சாதாரணதர, மற்றும் உயர்தர வகுப்பு மாணவ, மாணவிகள் இதில் கலந்து கொள்ளலாம்.

ஆக்கங்கள் 15 நிமிடங்களுக்குள் அமைந்தனவாக இருக்க வேண்டும்.

**''அன்பும் அமைதியும் நீதியும் சமத்துவமும் கொண்டதோர் புதிய சகாப்தத்தின் உதயத்தினை''** தொனிப்பொருளாகக் கொண்ட இப்போட்டிக்கான ஆக்கங்கள் பின்வரும் அம்சங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

**"தனக்குள்ளாகும் சமாதானம்"**
**"இறைவனுடன் சமாதானம்".**
**"அயலவருடன் சமாதானம்"**
**''உலகுடன் இணைந்த சமாதானம்''**

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் இப்போட்டிகளில் சிறந்ததாகத் தெரிவு செய்யப்படும் நாடகம், ஒக்டோபர் மாதத்தில் கொழும்பில் இதர மாவட்டங்களில் தெரிவு செய்யப்படும் நாடகங்களுடன் போட்டியிட அனுமதிக்கப்படும். இவைகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் நாடகங்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் காத்திருக்கின்றன.

மட்டு, அம்பாறை மாவட்டங்களுக்கான நாடகப்போட்டி எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் மட்டக்களப்பில் இடம்பெறும். பங்குபற்றும் பாடசாலைகள் தங்கள் விண்ணப்பங்களை 3-06.2001 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும். நாடகத்தெரிவுக்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும். அழைக்கப்படும் தினத்தில் வந்து மேடையேற்ற வேண்டும்.

பாடசாலைகளில் சமாதானத்தினை ஒரு பாடமாக அங்கீகரிக்கும் அளவுக்கு அத்தியாவசியத் தேவையேற்பட்டுள்ள இக்கால கட்டத்தில், பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் சமாதான சுகவாழ்வினைக் கட்டியெழுப்பும் எமது பல்வேறு முயற்சிகளிலும் தங்களது மேலான ஒத்துழைப்பை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுவதாக மட்டக்களப்பு எகெட் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# வாசகர் நெஞ்சம்

## சமுர்த்தி உத்தியோகஸ்தர் இடமாற்றம்

கல்முனைப் பிரதேச தமிழ்ப் பிரிவுக்குட்பட்ட பெரிய நீலாவணை 2ம் பிரிவில் கடமையாற்ற வந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பல ஊழல் சம்பவங்களில் சம்பந்தப்பட்டதாகவும், அவரது உறவினர்களுக்கு உதவிசெய்து 'சிலருக்கு' பாரபட்சம் புரிந்ததாகவும், எதற்கெடுத்தாலும் பாரபட்சம் காட்டுவதாகவும் அவரது 2ம் பிரிவில் சமுர்த்தி பெறும் குடும்பங்கள், மற்றும் ஆலய நிர்வாகம் விளையாட்டுக் கழகங்கள், பல இவரை இடம் மாற்றம் செய்யக்கோரியது முறைப்பாட்டை அடுத்து கல்முனை தமிழ்ப்பிரிவுப் பிரதேச செயலாளர் இவரை இடமாற்றம் செய்யவுள்ளதாகத் தெரியவருகிறது. இவரது இடமாற்றம் சம்பந்தமாக மக்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவுவதை அவதானிக்க முடிகிறது.

**எட்வேட் நிஸாந்தன்**
**பெரிய நீலாவணையூர்**

## 'பலநோக்கு'க் கூட்டுறவுச் சங்கம்?

"மக்கள் தமது பொருளாதார கல்வி கலாசார நலன்கருதி கடமையும் சமவுடமையும் என்ற அடிப்படையில் தாமாக கடமையும் சமவுடமையும் என்று இயங்குவதே கூட்டுறவுச் சங்கமாகும்.

ஆனால் இவ் இலக்கணம் பொருந்தாத சங்கமாக அரசடித்தீவு கூட்டுறவுச் சங்கம் காணப்படுகிறது. இங்கு நிர்வாகத்தில் இரு பிரிவுகள் காணப்படுகின்றன.

சிலர் சங்கத்தை சர்வாதிகாரப்போக்கில் நடத்துகிறார்கள். இவர்களின் பின்னால் இவரின் குழந்தைகள் போல் செல்லும் சில உறுப்பினர்கள் சங்கம் பாதாளக் கிடங்கு நோக்கிச்செல்ல பெரிதும் உதவுகிறார்கள்.

"கூட்டுறவு - நாட்டுயர்வு என்பது முதுமொழி" ஆனால் மேற்குறிப்பிட்ட சங்கத்தில்,

கூட்டுயர்வே - சிலர் வீடுகளின் உயர்விற்குக் காரணமாக உள்ளது.

"சீரான தலைமைத்துவமே சிறந்த வளர்ச்சியின் உயிர்நாடி"

**இங்ஙனம்**
**பட்டிப்பளை பிரதேச மக்கள்**

## குப்பை நிறைந்த வீதிகள்

நாவற்குடா பகுதியில் வீதிகளின் அவலநிலை தொடர்கதையாக உள்ளது.

மாநகர சபை நகர்ப்பகுதிகளில் குப்பை கூளங்களை அகற்றும் பணிக்கு முன்னுரிமை வழங்குகின்றது. புறநகர் பகுதிகளை உதாசீனம் செய்கின்றது என்ற குறைபாட்டை உறுதி செய்வதுபோல் புறநகர்ப்பகுதி குப்பையும் கூளமுமாக காட்சி தருகின்றது. நாவற்குடா கத்தாவடி பிள்ளையார் வீதியும், மெத்தை வீட்டு வீதியும் பாவனைக்குதவாத வீதிகளாக மாறிக்கொண்டிருக்கின்றன. சுத்தம் சுகம் தரும் என்பதை குடியிருப்பாளர்களும் கருத்தில்கொள்வதில்லை. மாநகர சபையும் கவனத்தில் எடுப்பதில்லை. வரிவசூல் செய்வது மட்டுந்தான் மாநகர சபையின் கடமையா? தூர்ந்துபோய் பாவனைக்கு தவாத வீதிகளாக, முகிறவல் வீதிகளை செப்பனிட மாநகரசபை கவனம் செலுத்தாதா? என்ற கேள்வி மக்கள் மனதில் தோன்றியுள்ளது. ஆணையாளர் நிர்வாகம் மேலதிக கவனம் செலுத்தினால் புறநகர் பகுதிகள் சுத்தமாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

**நாவலூர் சில்செல்வம்**
**நாவற்குடா**

# கைதாகி விசாரணையற்ற ஆசிரியர்கள் பற்றி

## பாதுகாப்பு, நீதி அமைச்சருடன் நடவடிக்கை! கல்வி அமைச்சர்—

**கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் விடுதலை தொடர்பாக பாதுகாப்பு; நீதி அமைச்சருடன் தொடர்வு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிறேம்ஜயந்த தமிழர் ஆசிரியர் சங்க குழுக்களிடம் தெரிவித்துள்ளார்.**

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க தூதுக்குழு கல்வி அமைச்சரை நேற்று முந் தினம் சந்தித்து உரையாடியது.இச் சந்திப்பில் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் தலைவர் சி.தண்டாயுதபாணி, பொதுச் செயலாளர் த.மகாசிவம், நிதிச் செயலாளர் ச.தர்மராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் பின்வரும் உறுதி மொழிகள் அமைச்சரால் வழங்கப்பட்டன.

படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆசிரியர்களை விடுவிப்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சருடனும்,நீதியமைச்சருடனும் தொடர்பு கொள்ளப்படும்,

தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் கோட்டா அடிப்படையிலானதல்ல எனவே இதில் அரசியல் தலையீடு இருக்க முடியாது.

தமிழ் பாடசாலைகளில் தமிழரல்லாத ஏனையவர்கள் நியமிக்கப்படுவது தொடர்பான விபரங்கள் தரப்பட்டால் அதனைத் தடுத்து நிறுத்தி நடவடிக்கை எடுக்கப்படும்.

நிறைவேற்று அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பான நேர்முகப் பரீட்சை ஒரு மாதத்தினுள் நடைமுறைக்கு வரும்.

விஷேட பாடங்களுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததும் நியமிக்கப்டுவர்.நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் தொடர்பாக மாகாண சபையிடமிருந்து விபரங்கள் கிடைத்தும் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

ஏனைய மாகாணங்களில் உள்ளதைப் போன்று வடக்கு கிழக்கின் சகல மாவட்டகளிலும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவதுடன் அவர்ளுக்கான அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்படும்.

ஏனைய மாகாணங்களில் உள்ளதைப் போன்று முதன்மை ஆசிரியர்களின் மாதாந்த விஷேட படிவை உயர்த்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

முதன்மை ஆசிரியர்கள் கல்வி நிர்வாக சேவைக்குள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ள அதேவேளை தொலைக் கல்வி நிர்வாகச் சேவை வகுப்பு 3க்குள் செய்யப்படுபவர்கள் வடக்கு கிழக்கிலுள்ள ஆசிரிய வள நிலையங்களுக்கு சாத்தியமான சகல வசதிகளும் செய்து தரப்படும்.

### வெட்டுப் புள்ளி விடயத்தில் பாதிப்புற்ற மாணவர்கள் நேற்று யாழ்.நகரில் ஊர்வலம்

(நமது நிருபர்)

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விவகாரத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் நேற்று யாழ். நகரில் ஊர்வலமாகச் சென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.நேற்றுக்காலை யாழ்ப்பாணம் சயன்ஸ் அக்கடமியில் ஒன்றுகூடிய இந்த மாணவர்கள் அங்கிருந்து ஊர்வலமாக ஈ.பி.டி.பியின் யாழ். தலைமைச் செயலகத்திற்குச் சென்று அமைச்சரைச் சந்தித்தனர். இந்த விடயம் தொடர்பாகத் தாம் ஏற்கனவே ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் - இரண்டு வாரங்களுக்குள் மாணவர்களுக்குச் சாதகமான பதிலைப் பெற்றுத்தருவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அந்த மாணவர்களிடம் உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

### வவுணதீவு.........

பெற்ற எறிகணை வீச்சில் 2 விடுதலைப் புலிகள் காயமடைந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் ஒருவர் பின்னர் மரணமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## கலாசார சீர்கேட்டிற்கு புலிகள் எச்சரிக்கை!

(மூதூர் நிருபர்)

திருகோணமலை நகரம் கலாசார சீர்கேடாக மாறி வருவதையிட்டு விடுதலைப் புலிகள் எச்சரிக்கை அறிக்கையொன்றை நேற்று வெளியிட்டுள்ளனர்.

திருமலை நகரப் பகுதியில் உள்ள கடற்கரை உவர் முலையின் பின்னால் உள்ள பகுதிகளில் கலாசாரத்தை பாதிக்கும் தீய வளிகளில் சிலர் ஈடுபடுவதாகவும் இதனால் தமிழ் முஸ்லிம் இளைஞர்,யுவதிகள் கலாசார சீரழிவு ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அறிக்கையில் இப் பிரதேசம் என்ன கொழும்பு பூங்காவா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறையினரால் வெளியிடப்பட்ட இவ்வறிக்கையில் இத்தகைய சமூக சீர்கெடுகளில் ஈடுபடுவோருக்கு எதிர் பாராதவிதமாக தண்டனைகள் வழங்கப்படும் எனவும் எச்சரித்துள்ளனர்.

### வந்தாறுமூலையில் ஸ்ரீ மகாவிஷ்ணு வித்தியாலய கண்காட்சி நேற்று ஆரம்பம்

(நமது நிருபர்)

கல்விக் கண்காட்சியின் மூலம் மாணவர்கள் தங்கள் ஆக்கத் தொழிற்பாடுகளை வெளிக்காட்ட கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது.அது மட்டுமன்றி மாணவர்கள் தங்களின் அறிவினை விருத்தி செய்து கொள்ளும் நிலையும் ஏற்படுகிறது.

இவ்வாறு வந்தாறுமூலை ஸ்ரீ மகா விஷ்ணு வித்தியால்யத்தில் நேற்று ஆரம்பமான கல்வியற் கண்காட்சி தொடக்க விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரும்,கல்க்குடா வலய கல்விப் பணிப்பாளருமான ஆ.குணரெட்ணம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எல்லாப் பாடசாலைகளிலும் எல்லா வசதிகளும் இல்லை.இவ்வாறான கண்காட்சிகளை நடாத்துவதன் மூலம் அறிவினை விருத்தி செய்யவும் சகல விடயங்களையும் மாணவர்கள் கண்டு கொள்ளவும் முடியும் எனவும் தெரிவித்தார்.

தொடக்க விழாவான காலை 9 மணிக்கு அதிதிகள் வித்தியாலய நுழைவாயிலில் இருந்து மாணவர்களின் இசையணி வரவேற்புடன் மண்டப வாயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் வைபவ ரீதியாக கண்காட்சி மண்டப வாயில் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.அதனைத் தொடர்ந்து அதிதிகள் குழுவினர் கண்காட்சிகளைப் பார்வையிட்டனர்.

மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலம்,ஏறாவூர் பற்று கோட்டக் கல்வி அதிகாரி இ.வேலுப்பிள்ளை உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

கல்க்குடா,மட்டக்களப்பு, பட்டிருப்பு வலயங்களைச் சேர்ந்த சுமார் ஐயாயிரம் மாணவர்கள் இக் கண்காட்சியினை பார்வையி ட்டனர்.

### 106 வயதில் மரணம்

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் மூன்று நூற்றாண்டுகளில் வாழ்ந்த பெருமையைப் பெற்ற கே.கந்தசாமி என்பவர் தனது 106ஆவது வயதில் காலமானார் 1895ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பிறந்த இவர் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், இலங்கை அரசின் ஆட்சியில் வளர்ந்து தற்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் காலமாகியுள்ளார்.

## சமுர்த்தி முத்திரைக்கு நிலையான விலையில் அரிசி

(கல்லாறு நிருபர்)

சமுர்த்தி முத்திரைக்கு ப.நோ.கூ. சங்கங்கள் விற்பனை செய்யும் அரிசி விலையை எல்லாச் சங்கங்களும் ஒரே விலையில் விற்பனை செய்வதற்கு மட்டக்களப்பு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி ஆர்.கேதீஸ்வரன் தீவிர கவனமெடுத்து வருகிறார்.

இம் மாதம் நடைபெற்ற மகா நாட்டில் அரிசி கிலோ ஒன்று உச்ச விலை 23 ரூபா என தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அரிசி உற்பத்தி செய்து விற்பனை செய்யும் சங்கங்கள் மட்டும் சிறிதளவு மாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரிசி விற்பனை செய்யும் விலை சம்பந்தமாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அடங்கிய குழு ஒன்று ப.நோ.கூ சங்கங்களுக்கு நேரடியாக தீடிர் விஜயங்களை மேற் கொண்டு அரிசி விலையை கண்காணித்து வருகின்றது.

### இலங்கையின்................

ப்பட்ட உள்ளக விசாரணையின் பின்னர் வவுனியாவில் ஆட்கள் காணாமல் போவது தற்காலிகமாக குறைந்திருந்த போதும் 'கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் மேலும் இருவர் காணாமல் போயுள்ளதாகவும் மன்னிப்புச் சபை தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு, மட்டக்களப்பு,யாழ்ப்பாணம்,மன்னார், திருகோணமலை 'ஆகிய இடங்களில் காணாமல் போனோர் தொடர்பாக முறையிடப்பட்டிருப்பதாகவும் சர்வதேச மன்னிப்பச் சபை மேலும் தெரிவித்துள்ளது.

### சமாதான.........

பேச்சுக்களில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டால் தடையை முற்றாக நீக்குவது குறித்து ஆலோசிக்கலாம்" - இப்படிக் கட்சியின் முக்கிய பிரமுகர்களால் முன்வைக்கப்பட்ட கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் - அக்கருத்தைக் கூட்டத்தில் இருந்த எவரும் எதிர்க்கவில்லை என்றும் - இனவிவகாரப் பிரதி அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான கணேசமூர்த்தி தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு கூறியுள்ளார்.அமைச்சர்கள் ஜி.எல். பீரிஸ், மங்கள சமரவீர, எஸ்.பி.திஸநாயக்க, அத்தாவுட செனிவிரத்தின போன்றோரும் தானும் இக்கருத்தை மத்திய குழுக் கூட்டத்தில் வலிறுயுத்தியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்அரசு முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கும், இது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுக்கும் நிலைப்பாட்டுக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் தரும்படி பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் உள்ள ஏனைய கட்சிகளைக் கோருவது என்றும் இக்கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### தாதியர்.........

றார்கள்.தள்ளு வண்டியில் ஏற்றிய போது குழந்தை பிரசவமானதை உணர்ந்த அப்பெண் பிரசவ வேதனையும் பொருட்படுத்தாது தான் அணிந்திருந்த ஆடையினால் குழந்தையைச் சுற்றி பிடித்திருக்கிறார்.

இதனால் குழந்தையின் முகத்தில் தள்ளுவண்டி சிறிய சிறாய்வை ஏற்படுத்தியிருக்கிறது.நான் அப்படி பிடியாமல் விட்டிருந்தால் குழந்தை நிலத்தில் வீழ்ந்து தலை அடிப்பட்டு இறந்திருக்க கூடும் என சம்பந்தப்பட்ட பெண் தெரிவித்தார்.

தற்போதும் தாயும் பிறந்த குழந்தையும் நலமாக உள்ளனர்.அரச சேவையில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது.எனச் சம்பந்தப்பட்ட பெண்ணின் உறவினர் தெரிவித்தார்..

## புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு ஊர்வலங்கள்

(பாண்டிருப்பு கேதீஸ்)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கல்முனை தமிழ்,முஸ்லிம் பிரிவுகளைச் சேர்ந்த சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவினர் புகைத்தலுக்கு எதிராக விழிப்புணர்ச்சி ஊர்வலங்களை 30.05.2001 அன்று கல்முனை பிரதேசத்தில் நடத்தினர்.

இவ் ஊர்வலங்களில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டதுடன், பலர் புகைத்தலுக்கு எதிரான வாசகங்கள் பொறித்த சுலோக அட்டைகளை ஏந்தியாவாறு துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டும்,புகைத்தலினால் ஏற்படும் தீமைகளை ஒலி பெருக்கி மூலம் விளக்கிய வாறும் கல்மூனை, மற்றும் நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, மணற்சேனை, நற்பெட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய கிர்ாமங்களுடாகச் சென்று இறுதியாக பிரதேச செயலகத்தை வந்தடைந்தனர்.

### கச்சான் வீசியது வெப்பம் தணிந்தது

(தவம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கச்சான் காற்று வீச ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து கோடையின் வெப்பம் குறைந்து காணப்படுகின்றது.

எனினும் கண் நோய், அம்மை போன்ற நோய்கள் பரவி வருவதை காண முடிகிறது.

கண் கண்ணாடி



கண் நிபுணரால் கண்களை பரிசீலனை செய்து 30 நிமிடத்தில் கண்ணாடியைப் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

சென்றல் ஒப்டிசியன்ஸ்

51, மட்டக்களப்பு வீதி, கல்முனை.
தொலைபேசி:- 067-20288
தொலை மடல்:- 067-29536

6 பன்சல றோட், மட்டக்களப்பு
தொலைபேசி:- 065-24612

குறிப்பு:-
இவ்வருடம் ஏப்ரல் 01. 2001 முதல் டிசம்பர் 31ம் திகதி 2001 வரை எங்களிடம் மூக்குக் கண்ணாடி வாங்குவோருக்கு
1ம் பரிசு- 1பவுண் தங்க நாண யம்,
2ம் பரிசு- 1/2 பவுண் தங்க நாணயம், மேலும் 50 ஆறுதல் பரிசுகளும் உள்ளன. எங்களிடம் வாங்கும் 10 பற்றுச்சீட்டுக்களைப் பத்திரமாக வைத்திருக்கவும்.

இப்பத்திரிகை வேலட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.